திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் மானாமதுரை தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 முதல் 1967 வரை மற்றும் 1967 முதல் 1971 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் திருவட்டாறு தொகுதியிலிருந்து தொடர்ந்து மும்முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 வரை, 1971 முதல் 1976 வரை மற்றும் 1977 முதல் 1980 வரை போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எ.தா. பொன்னுவேலு அவர்கள் வரகூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 முதல் 1996 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பாலஸ்தீன அதிபர் திரு. யாசர் அராபத் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். பாலஸ்தீன அதிபர் திரு. யாசர் அராபத் அவர்கள் மறைவு குறித்து கீழ்க்காணும் இரங்கல் தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்:

"40 ஆண்டு காலமாக பாலஸ்தீன மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவரும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரும், பாலஸ்தீன மக்களுக்காக சுதந்திர நாடு ஒன்றை உருவாக்குவதே தனது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவரும்,

பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய தலைசிறந்த தலைவரும், வீரத் திருமகனும், ஒரு தலைசிறந்த ராஜதந்திரியாக வரலாறு படைத்தவரும், இந்தியா உட்பட பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் நெருங்கிய நட்புக் கொண்டவரும், 1993 ஆம் ஆண்டு ஆஸ்லோவில் இஸ்ரேலுடன் ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும், பாலஸ்தீனியரின் தாயகத்தை மீட்டுத் தரும் இலட்சியத்துடன் பாலஸ்தீன மக்களை தன்பக்கம் ஈர்த்து வந்தவருமான பாலஸ்தீன அதிபர் திரு. யாசர் அராபத் அவர்கள் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் தேதி பாரீஸ் மருத்துவமனையில் மறைந்த செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. மறைந்த இத்தலைவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், இத்தலைவரின் மறைவினால் ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் பாலஸ்தீன மக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

(முற்பகல் 10-05

(ஆ) சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் அவர்கள் மறைவு குறித்து கீழ்க்காணும் இரங்கல் தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்.

"முனைவர் மு. தமிழ்க்குடிமகன் தலைசிறந்த இலக்கியவாதி; இனிய பண்பும், செயல் திறனும் கொண்டவர்; தமிழ்மீது அளப்பரிய பற்றுடையவர்; தமிழ் மொழி ஏற்றம் பெற்றிட தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்; தமிழில் பல்வேறு நூல்களை எழுதிய இணையற்ற எழுத்தாளர்; தமது எழுத்திலும் சொல்லிலும் பெருமைகள் பல பெற்றவர்;